

தமிழ்நாடு வீட்டு வசதித்துறை ஆய்வுக் கூட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமை மற்றும் வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன் முன்னிலையில் நேற்று (05.01.26) சி.ஐ.டி. நகரில் அமைந்துள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் கணபதி, வி.பிரபாகர் ராஜா, வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குனர் டாக்டர் சு.பிரபாகர், நகர ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், நில எடுப்பு விடுவிப்புக்காக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற அதிகாரிகள் முனைவர் சி.முனியநாதன், முனைவர் வி.பழனிக்குமார், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் ஆர். பாலசுப்ரமணியன், தலைமை வருவாய் அலுவலர் கே.ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) ப.சைலேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் (திட்டங்கள்) டாக்டர் டி.சுரேஷ், நிதி ஆலோசகர் தரணி பாபு உள்ளிட்ட வாரிய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தை திருநாளை முன்னிட்டு வருகிற 14ஆம் தேதி மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் தமிழர்களின் பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டு விழா நடைபெற உள்ளதை முன்னிட்டு விழாவிற்கான கால்கோல் ஊண்டும் நிகழ்ச்சியினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையேற்று துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், மாநகர காவல் ஆணையர் லோகநாதன், மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கிராம பொதுமக்கள், கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.

### மதநல்லிணக்கத்துக்காகத் தொடர்ந்து உழைக்கும்

# பேராசிரியர் காதர் மொகிதீனுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

**சென்னை, ஜன. 6 -**

**இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் மதநல்லிணக்கத்துக்காகத் தொடர்ந்து உழைத்து, வருபவர் என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது வாழ்த்துச் செய்தி வருமாறு:

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் நம் அனைவரின் மரியாதைக்குரிய ‘தகைசால் தமிழர்’ பேராசிரியர் காதர் மொகிதீன் ஐயா அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!

பத்திரிகையாளர், பேராசிரியர், நாடாளுமன்ற உறுப்பினர் எனப் பலநிலைகளிலும் சமூகத்துக்குப் பங்களித்து, மதநல்லிணக்கத்துக்காகத் தொடர்ந்து உழைத்து வரும் தாங்கள் நீண்டகாலம் நலத்துடன் திகழ விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தமிழ் மின் நூலகத்தில்


# ஜி.டி.நாயுடுவின் சிறப்பு இணையப் பக்கம் தொடக்கம்!

## அமைச்சர் – முனைவர். பழனிவேல் தியாகராஜன் தகவல்!

சென்னை,ஜன. 6 -

தமிழ்நாடு முதல மைச்சர் வழிகாட்டுதலின்படி, ஜி.டி.நாயுடு அவர்களின் ஆவணங்கள் மின்பதிப் பாக்கம் செய்யப்பட்டு, தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட் டல் சேவைகள் துறையின் கீழ் இயங்கிவரும் தமிழ் இணையக் கல்விக்கழகத் தின் மின் நூலகத்தில் பதி வேற்றம் செய்யப் பட்டு, ”தமிழ்நாட்டு அறிவியலா ளர் ஜி.டி. நாயுடு” என்னும் பெயரில் உருவாக்கப்பட் டுள்ள சிறப்பு இணையப் பக்கத்தை (https://tamildigitallibrary.in/gdn), அன் னாரது நினைவு நாளான ஜனவரி 4 இன்று, தமிழ் நாடு தகவல் தொழில்நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச் சர் பழனிவேல் தியாக ராஜன் தொடங்கி வைத் தார்.

பன்முக ஆளுமை ஜி.டி. நாயுடு, அரிய நூல்கள் அடங்கிய பெரிய நூலகம் ஒன்றைப் பராமரித்துவந் தார். அவருடைய தொகுப் பிலிருந்து 30 ஆயிரம் புத்த கங்களை அந்நாளைய கோவை நகரமன்றத்திற்கு அன்பளிப்பாக அளித்துள் ளார். பொதுவிழாக்களில் கலந்துகொண்டபோது, தம்முடைய உரையைச் சிறுநூலாக அச்சடித்து அவையினருக்குக் கொடுப் பது அவரது வழக்கம். அப் படியான அவரது எழுத்துக ளையும் சிந்தனைகளையும் தாங்கிய கட்டுரைகள், வாழ்க்கை வரலாறுகள், அவர் பதிப்பித்த, அவர் வாசிப்புக்காகச் சேகரித்த நூல்கள், இதழ்கள், புகைப் படங்கள் ஆகியவற்றை உள்ளடக்கமாகக் கொண்ட அரும்பெரும் இணையப் பக்கம் இது.



“ஜி.டி.நாயுடுவின் அறி வைச் சமுதாயம் முழு அள வில் பயன்படுத்திக் கொள் ளவில்லை என்றாலும், எதிர்காலத்தில் நம்முடைய சந்ததியருக்கு, அவருடைய கண்டுபிடிப்பும் அறிவும் பெரும்கருவூலங்களாக அமையும்” என அறிஞர் அண்ணா கூறியதைத் தமிழ்நாடு அரசு அவரு டைய சிந்தனைகளைக் கரு வூலமாக்கி ஓர் அரிய காலப் பேழையை வெளியிட்டு நனவாக்கியுள்ளது.

”தமிழ்நாட்டு அறிவிய லாளர் ஜி.டி. நாயுடு” சிறப்பு இணையப் பக்க உருவாக்கத்தில் பங்குவ கித்த அலுவலர்கள் ஒவ் வொருவருக்கும் தமிழ் நாடு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட் டல் சேவைகள் துறை அமைச்சர் வாழ்த்துகளை யும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.

அறிவைப் பொதுமை செய்வோம் என்னும் நோக்கத்தில் செயல்படும் தமிழ் மின் நூலகத்தின் இந் தச் சிறப்பு இணையப் பக் கம் தமிழ்கூறும் நல்லுல குக்கு மேலும் ஒரு நல்வரவு.

இந்நிகழ்வில் கோம கன், இயக்குநர் (பொ.), செல்வ புவியரசன், உதவி இயக்குநர், சித்தானை, திட்ட அலுவலர் உள் ளிட்ட தமிழ் இணையக் கல்விக்கழக அலுவலர்கள் பங்கேற்றனர். மேலும், ஜி.டி. நாயுடு அறக்கட் டளை தலைவர் கோபால், அறங்காவலர்கள் ராஜ்கு மார், திருமதி அகிலா, ஜி.டி. அருங்காட்சியகத் தின் பொது மேலாளர் சுரேஷ், நூலகர் திருமதி. சங்கீதா மற்றும் ரமேஷ்கு மார், தலைவர், புகைப்பட ஆவணக்காப்பகம், புதுச் சேரி பிரெஞ்சு நிறுவனம், உள்ளிட்டோர் காணொலி வாயிலாக கலந்து கொண்டனர்.

### நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பொங்கல் திருநாளை விளையாட்டுப் போட்டிகள் நடத்தி சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! இரா.ஆவுடையப்பன் தலைமை!

நெல்லை, ஜன. 6 -

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற் குழு கூட்டம் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்த ளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க மேற்கு மாவட்டக் கழக அலுவல கம், டாக்டர்.கலைஞர் அரங்கத்தில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப் பாளர் இரா.ஆவுடையப் பன் தலைமையில் தலை மைச் செயற்குழு உறுப்பி னர்கள் ஆ.பிரபாகரன், கே. கே.சி.பிரபாகரன், தொகுதி பார்வையாளர் அம்பாச முத்திரம் ஜோசப்ராஜ், மாநில நிர்வாகிகள் : பூங் கோதைஆலடி அருணா, ஆவின் ஆறுமுகம், மாவட்ட துணை செயலா ளர்கள் மா.மைக்கேல், தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் நடை பெற்றது.

இந்தக் கூட்டத்தில் விளையாட்டுப் போட்டி களை சிறப்பாக நடத்த முடிவு செய்யப்பட்டது.

பின்னர் மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவு டையப்பன் கூறியதாவது.

கழகத் தலைவர் அவர்க ளின் ஆணைக்கிணங்க பொங்கல் திருநாளை முன் னிட்டு ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் விளை யாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்த வேண் டும் என்றும் இதில் வெற்றி பெறுபவர்கள் மாநில அள விலான போட்டிக்கு தேர்வு செய்யப்படு வார் கள்.(SIR) பணிகள் குறித் தும் ஆலோசனைகள் வழங் கியும் 2026 மீண்டும் நம் கழக தலைவர் முதல மைச் சர் ஆவார்கள். அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் அபூபக்கர், கணேசன், கதிர்வேல் முரு கன், ரவிச்சந்திரன் ஒன்றிய செயலாளர்கள், பொறுப் பாளர்கள் அம்பாசமுத்தி ரம் கிழக்கு R.சிவனு பாண் டியன் (எ) பரணிசேகர், அம்பாசமுத்திரம் மேற்கு பா.ஜெகன், சேரன்மகா தேவி கிழக்கு முத்துபாண்டி (எ) பிரபு, சேரன்மகாதேவி மேற்கு முத்து கிருஷ்ணன், ஆலங்குளம் கிழக்கு மு.செல்லத்துரை, ஆலங்கு ளம் மேற்கு க.சமுத்திர பாண்டியன், ஆலங்குளம் தெற்கு சிவக்குமார்,

கடையம் கிழக்கு குமார், கடையம் மேற்கு ஜெயக்குமார் கடையம் வடக்கு மகேஷ் மாயவன், கீழப்பாவூர் கிழக்கு சிவன் பாண்டியன், கீழப்பாவூர் வடக்கு பொன்செல் வன், நகர செயலாளர் விக் கிரமசிங்கபுரம் கி.கணே சன் பேரூர் கழக செயலா ளர்கள் ஆலங்குளம் நெல் சன், ஆழ்வார்குறிச்சி அழ கேசன், முக்கூடல் லஷ்சும ணன், கீழப்பாவூர் ஜெக தீசன், கல்லிடைக்குறிச்சி இசக்கிபாண்டி, வீரவநல் லூர் சுப்பையா, சேரன்ம காதேவி மணிஷா செல்வ ராஜ், பத்தமடை சிந்தா மதார், கோபாலசமுத்திரம் வானுவாமலை அணி அமைப்பாளர்கள் மகளிர் அணி சங்கீதா சுதாகர், மகளிர் தொண்டர் அணி திவ்யா மணிகண்டன், வழக்கறிஞர் அணி ஜெ. செல்வசூடாமணி, இலக் கிய அணி ந.சுப்பிரமணி யன் (எ) நெல்லைமணி, அய லக அணி கா.பீர்முகம்மது, அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி நா.பிரகாஷ், தகவல் தொழில்நுட்ப அணி எஸ். பிரேம்ஆனந்த், விளை யாட்டு மேம்பாட்டு அணி தவசி மணிகண்டன் மற் றும் மாவட்ட இளைஞ ரணி துணை அமைப்பா ளர்கள் வேல்முருகன், ஆகாஷ், ராஜ், பொறியாளர் அணி துணை அமைப்பா ளர் மணிகண்டன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பிர பாகரன், ஆலடி எழில்வா ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசு அலுவலர்கள் இருபதாண்டு காலக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதனை அடுத்து ஓய்வூதிய திட்டத்தை அறிவித்த தமிழக முதல்வர் மு.க .ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு ஆண்டிபட்டி மாநில நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் சாலை பணியாளர்கள் சார்பில் இனிப்புகள் வழங்கி பட்டாசு வெடித்து நன்றி தெரிவித்தனர்.

### நீண்ட நாள் கோரிக்கையான

# தமிழ்நாடு அரசு ஊழியர்களின் ஓய்வூதிய அறிவிப்பு!


## முதல்வருக்கு — வைகோ பாராட்டு!

சென்னை, ஜன.6 -

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசு அலு வலர்களுக்கு முறையான ஓய்வூதியம் வழங்குவது குறித்து தகுந்த பரிந்துரை கள் வழங்க, அரசு கூடுதல் தலைமைச் செயலர் ககன் தீப் சிங் பேடி தலைமை யில் ஒரு குழு அமைக்கப் பட்டது; அந்தக் குழுவும் பரிந்துரை அறிக்கையை அளித்தது.

அதை முழுமையாக ஆராய்ந்து, தமிழ்நாடு அரசு தற்போது சந்தித்து வரும் நெருக்கடியான நிதிச்சூழலில், தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நீண்ட



நாள் கோரிக்கையை நிறை வேற்றும் வகையில் ‘தமிழ் நாடு உறுதியளிப்பு ஓய்வூ தியத் திட்டம்’ என்ற புதிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அறிவிப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளி யிட்டு இருப்பது வரவேற் கத்தக்கது. இந்தத் திட் டத்தை அரசு ஊழியர் - ஆசிரியர் சங்கங்களும் வரவேற்றுள்ளன.

“20 ஆண்டு காலம் ஓய் வூதியம் இல்லாத நிலை மைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. மேலும், பணிக் கொடை ரூ.25 லட்சம், அகவிலைப் படியுடன் கூடிய ஓய்வூதி யம் வழங்க உறுதியளிக் கப்பட்டு இருக்கிறது.

குறைந்தபட்ச ஓய்வூதி யம், கருணை அடிப்படை யில் ஓய்வூதியம் வழங்கப் படும் என்ற அறிவிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது” என்று ஜாக்டோ-ஜியோ, தலைமைச் செயலக சங் கம், அரசு ஊழியர் சங்கம், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி, தொடக்கப் பள்ளி ஆசிரி யர் மன்றம் உட்பட பல் வேறு அரசு ஊழியர் -ஆசி ரியர் சங்கங்களின் நிர்வாகிகள் மகிழ்ச்சி தெரிவித்து முதல்வரையும் சந்தித்து நன்றி தெரிவித் தனர்.

தமிழ்நாடு அரசு இயந் திரம் சிறப்பாக இயங்குவ தற்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதி யம் அறிவிப்பு வெளியிட் டுள்ள தமிழ்நாடு முதல மைச்சருக்கு பாராட்டுக் களை தெரிவித்துக் கொள் கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### “தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்”

# தமிழ்நாடு அரசு அலுவலர்கள் - ஆசிரியர்கள் வாழ்த்திப் பாராட்டும் வகையில் அமைந்திருக்கிறது!

## பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் அறிக்கை!

திருச்சி, ஜன. 6 -

“தமிழ்நாடு உறுதியளிக் கப்பட்ட ஓய்வூதியத் திட் டம் “தமிழ்நாடு அரசு அலு வலர்கள் மற்றும் ஆசிரியர் சமூகம் ஆகிய இரு சாராரும் வாழ்த்தி வரவேற்றுப் பாராட்டும் வகையில் அமைந்திருக்கிறது என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலை வர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் தெரிவித் தார். இந்திய யூனியன் முஸ் லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் 04.01.2026 ஞாயிற்றுக்கி ழமை விடுத்துள்ள அறிக்கை யில் கூறியதாவது : ஆட்சி இயந்திரம், அரசு அலுவலர் களால் செம்மையாக இயக் கப்படுவதால் தான், நாட்டு மக்கள், பண்பட்ட ஜனநா யக வழித்தடத்தில் அமைதி யில் ஆக்கங்கள் உருவாக்க முடிகிறது.

ஆசிரியப் பெருமக்கள், தங்களின் தூய புனிதப் பணி களால், மக்களின் இதயத் தில் மண்டும் உள் இருளைப் போக்குவதால் தான், பண் பட்ட பாதையில் சமுதாயம் பயணிக்கிறது. இவ்விரு சாரார் சற்றொப்ப 20 ஆண்டு காலமாகச் கோரி வந்த நியாமான கோரிக் கையை ஏற்று, தீர்க்கப்படா மல் தொடர்ந்த சிக்கலைத் தீர்க்கும் உன்னத நோக்கத் தில் திராவிட மாடல் நல் லாட்சி நாயகர் முதல மைச் சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. “தமிழ்



நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் “தமிழ் நாடு அரசு அலுவலர்கள் மற் றும் ஆசிரியர் சமூகம் ஆகிய இரு சாராரும் வாழ்த்தி வர வேற்றுப் பாராட்டும் வகை யில் அமைந்திருக்கிறது. இது நாடும் எல்லோரும் வரவேற் றுப் பாராட்டும் உன்னத மான நற்காரியமாகும்.


நீண்ட நாளைய மனக்கு முறலுக்கு முடிவு கட்டி, அரசு அலுவலர்களும் ஆசிரி யப் பெருமக்களும் தமது வாழ்க்கைப் பயணத்தைப் புதிய உத்வேகத்துடனும் புதிய நோக்குடனும் தொடர வழிகாட்டி யிருக்கி றது. தமிழ்நாடுத்திற்கு நேற்றை விட இன்று நல்ல தாகவும், இன்றை விட வருங்காலம் மிகவும் நல்ல தாகவும் அமையும் என்ப தற்கு இத்தகைய நற்காரியங் கள் நற்சாட்சி களாகின்றன.

வாழ்க தமிழ்நாடு! வெல்க திராவிட மாடல் நல் லாட்சி, இன்று போல் என் றும் !.

இவ்வாறு பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தனது அறிக்கையில் தெரி வித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பூவாளூர் சின்னதுரை**
**சனவரி 6 (2014)**



**தந்தை பெரியாரிடம் அணுக்கமாக இருந்து பணியாற்றியவரும், பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்றவரும், தொடக்கத்தில் நண்பராகவும், பின்னர் தலைவராகவும் கலைஞரை ஏற்றுச் செயல்பட்டவர்.**

**திராவிடர் கழகத்தில் இருந்தபோது இந்தித் திணிப்பை எதிர்த்து ஆறு முறை சிறை சென்றதையும் – தி.மு.க.வில் தம்மை இணைத்துக் கொண்ட பின்னர் கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் 12 முறை சிறை சென்றதையும் பெருமையாகக் கருதியவர்.**

**1998ஆம் ஆண்டு தி.மு.க. நடத்திய முப்பெரும் விழாவில் “பெரியார் விருது” வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**